**Dated : 30.01.2026** (நேரம் : காலை 11.20 மணி)

**Crl.M.P.No. 7628/2024 in MC No. 48/2008**

**PW 1 திருமதி. ரேணுகா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

எங்கள் திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் ஆசிரியர் பயிற்சி படிப்பு படித்து கொண்டிருந்தார். திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் திருச்சியில் விடுதியில் தங்கி ஆசிரியர் பயிற்சி படிப்பு படித்து கொண்டிருந்தார். அவர் படிப்பு முடித்த பிறகு என்னுடன் சேர்ந்து வாழ வரவில்லை என்று சொல்லி சேர்ந்து வாழ வருமாறு கேட்டு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதன்பிறகு 2008 ம் ஆண்டு ஜீவனாம்சம் கேட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். எதிர்மனுதாரர் எனக்கு எதிராக விவகாரத்து கேட்டு HMOP NO. 67/2008 மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஜீவனாம்சம் வழக்கில் எதிர்மனுதாரர் எனக்கு மாதந்தோறும் ரூ.1,500/– ஜீவனாம்சம் செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி அவர் மேற்படி தொகையை இன்றுவரை தவறாமல் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அதுபோல் எதிர்மனுதாரர் மேற்படி விவகாரத்து வழக்கில் எனக்கு எதிராக சட்டப்படி விவகாரத்து பெற்றுக்கொண்டு அதன் பிறகு வேறு திருமணம் செய்து அதன்மூலம் அவருக்கு குழந்தை உள்ளது. எதிர்மனுதாரருக்கு வயதான அப்பா மற்றும் அம்மா இருக்கிறார்கள் என்றால் சரிதான். கடந்த 15 ஆண்டுகளாக மேற்படி ரூ.1,500/– ஜீவனாம்சம் தொகையை எந்தவித ஆட்சேபனையுமின்றி பெற்றுக்கொண்டு வருகிறேன் என்றால் சரிதான். நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு 35 வயதாகிறது. எனக்கு எந்தவித நோய், நொடியுமின்றி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். கடந்த 15 ஆண்டுகளாக நான் எதாவது வேலைக்கு செல்வதற்கோ சுயமாக தொழில்

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.30 16:34:47 +0530

செய்வதற்கோ எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு குழந்தைகள் யாரும் இல்லை, என்னை சார்ந்து யாரும் இல்லை என்றால் சரியல்ல, என் அப்பா, அம்மா இருக்கிறார்கள். 15 வருடம் கழித்து ஜீவனாம்சம் தொகையை 10 மடங்காக உயர்த்தி கேட்பதற்கு நான் சட்டரீதியாக எந்த காரணங்களும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணம் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு வயதாகிறது, என்னால் கூலி வேலைக்கு செல்ல முடியவில்லை போன்ற காரணங்களை சொல்லியுள்ளேன். நான் கடந்த 15 ஆண்டுகளாக எதிர்மனுதாரரிடம் மாதம் ரூ.1500/- ஜீவனாம்சமாக பெற்றுக்கொண்டு வந்துவிட்டு தற்போது எதிர்மனுதாரர் அரசு வேலைக்கு சென்றுள்ளதால் அவரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 2009 ம் ஆண்டிலேயே அரசு வேலைக்கு சென்றுவிட்டார். நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும், அசல் மனுவில் அவர் 2011 ம் ஆண்டு வரை கூலி வேலை பார்த்து வருவதாக தான் கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தனியாக குடும்பம் உள்ளதால் அந்த குடும்பத்தையும், வயதான பெற்றோரையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரருக்கு உள்ளது என்றும், அதனால் நான் கோரும் கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஜீவனாம்சம் தொகையை உயர்த்தி கேட்பதற்கு மனுவில் எந்தவித நியாயமான காரணம் எதுவும் சொல்லவில்லை என்றும், அதனால் மனு நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.30 16:34:54 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.